1972 ஆகஸ்ட் 21]

லாளர் நலத் துறை அதிகாரிகளின் நன்முயற்சியுடன் அவ்வப்போது பேச்சு வார்த்தைகள் நடத்தி முடிவு செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் கீழ்க் காணும் தொழிற்சாலைகளில் உற்பத்தியுடன் இணைந்து ஊதியம் வழங்கும் முறை பின்பற்றப்பட்டு வருகிறது :

1. சிம்சன் தொகுதியில் பொறியியல் நிறுவனங்கள்.

2. மலைத் தோட்டத்தில் பறித்தல் வேலை.

3. பஞ்சாலைகள் பலவற்றில் குறிப்பாக நூல் சுற்றும் துறைகளில்.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, ஊக்கத்திற்கேற்ற ஊதியம் வழங்குகின்ற நேரத்தில் தொழிலாளர்களுக்கு ஊக்கமும், முதலாளிகளுக்கு வருமானமும், அதேநேரத்தில் நாட்டுக்கும் வருமானம் கிடைக்கிறது. ஆகவே, மொத்தமாக இதைப் பரிசீலித்து இந்தத் திட்டத்தை அமுல்படுத்த அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, உற்பத்தியுடன் ஊதியத்தை இணைக்கும் காரியத்துக்காக பல்வேறு துறைகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உற்பத்தித் திறனைக் கருத்திற் கொண்டு உற்பத்தியுடன் ஊதியத்தை இணைக்கும் குறிக்கோள் அளவுகள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் கூட, அந்தக் குறிக்கோள் அளவுகளுக்கு மேற்பட்டு அதிக அளவு உற்பத்தியை எய்த தொழிலாளர்கள் நன்கு பாடுபடுவதோடு அவர்கள் பெறும் சிறப்பான அடிப்படைச் சம்பளத்துடன் ஊக்கத்தொகையும் பெற வேண்டும். என்பதும், உற்பத்தி உயர்வுக்காக வரையறுத்த வீதங்களைக் காட்டிலும் அதிக ஊதியம் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும்போது தற்போது உள்ளதுபோல் யூனிட் ஒன்றுக்குக் கூடுதல் ஊதியம் அல்லது திருத்தியமைக்கப்பட்ட அடிப்படை ஊதியங்களின் மீது வரையறுத்த ஊதியங்கள் இவற்றில் எது அதிகமாக உள்ளதோ அது கிட்டும் வகையில் மேற்படி வீதங்கள் தகுந்தவாறு திருத்தியமைக்கப்பட வேண்டும் என்பது சில கம்பெனிகளில் செய்துகொண்ட உடன்படிக்கைகளிலிருந்து தெரிய வருகிறது. அது எல்லாக் கம்பெனிகளுக்கும் நீட்டிக்கப்படுவதுபற்றி பரிசீலிக்கப்பட்டு விரைவில் முடிவெடுக்கப்படும்.

### சாணார்பட்டிக்குத் துணைப் பதிவாளர் அலுவலகம்

*** 213 வினா—திரு. க. நாகராஜன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், திண்டுக்கல் வட்டம், சாணார்பட்டியில் துணைப் பதிவாளர் அலுவலகம் ஒன்றைத் திறப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இல்லை.